

தேசத்தின் மீது கடன்சுமையேற்றாது

# புதுப் பணியாற்றிய

பன்னிரு வருடங்கள்

தேசத்தின் மீது கடன்சுமையேற்றாது

# *புதுப் பணியாற்றிய*

## பன்னிரு வருடங்கள்

**தயாரிப்பு**

குசான் சமீரா, பூஜித ஹேவாவசம்

முவிந்து பெரேரா

தேசத்தின் மீது கடன்சுமையேற்றாது
புதுப் பணியாற்றிய பன்னிரு வருடங்கள்

முதற்பதிப்பு : 2019

© 2019 பாட்டலி சம்பிக்க ரணவக்க

முன்னட்டை தயாரிப்பு மற்றும் கணனி பக்க வடிவமைப்பு
சாருக்க குமாரபேலி, முவிது பெரேரா

# உள்ளடக்கம்


5

நாட்டை ஈடு வைத்தது உண்மையா?

21

சுற்றாடல் மற்றும் இயற்கைவள
அமைச்சு பொறுப்பு

31

மின்சக்தி மற்றும் எரிசக்தி
அமைச்சு பொறுப்பு

39

தொழில்நுட்ப மற்றும் ஆய்வு
அமைச்சு பொறுப்பு

45

மாநகர மற்றும் மேல்மாகாண
அபிவிருத்தி அமைச்சு பொறுப்பு


# நாட்டை ஈடு வைத்தது உண்மையா?

அரசாங்கம் நாட்டை ஈடு வைத்துள்ளது என பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் பெரும்பாலான எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கூறி வருகின்றனர். நாட்டின் மீதான கடன் சுமை அதிகம் என பொருளாதார நிபுணர்களும் கூறுகின்றனர். சில சமயங்களில் அரச தரப்பு தலைவர்களும் கடன் சுமை அதிகமென கூறுவதுண்டு. முன்னைய அரசாங்கத்தின் பாவத்தை சுமப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உண்டுகுடிக்கவன்றி துறைமுகம், விமான நிலையம், அதிவேக நெடுஞ்சாலை போன்ற அபிவிருத்தி செயற்பாடுகளுக்காகத் தான் கடன் பெற்றதாக அரசியல்வாதிகள் கூறுகின்றனர். இதன் காரணமாக படிப்படியாக நாட்டினதும் மக்களினதும் வருமானம் அதிகரித்துள்ளதாம்.


கடந்த இரண்டு தசாப்த புள்ளிவிபரங்களை அவதானித்தால் நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியை போன்றே தனிநபர் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. அதே போன்று அரச கடனும் உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. அது மட்டுமன்றி தனிநபர் கடனும் அதிகரித்துள்ளதாம். நாட்டின் பௌதீக முன்னேற்றத்தை நோக்கினால் நாட்டில் கட்டிடங்கள் அதிகமாக நிர்மாணிக்கப்பட்டு வீதிகள் நிரம்பிவழியும் அளவிற்கு வாகனங்கள் பெருகி சொகுசு வர்த்தக நிலையங்கள் மற்றும் கடைகள் அதிகரித்து, மக்கள் முன்னரைவிட அழகாக அணிந்து மிகவும் சுத்தமான நகரங்களும் கிராமங்களும் உருவாகியுள்ளதாக கூறிவருகின்றனர். இவை அனைத்தும் மீளச் செலுத்த முடியாத பாரிய கடன் மலையின் மீதே கட்டியெழுப்பப்பட்டுள்ளதென்றால், பாவனையை விட அதிக வேகத்துடன் கடன் சுமை உயர்ந்துள்ளதென்றால் நாம் அது தொடர்பில் கவனம் செலுத்தியாக வேண்டும். நிலைமை பாரதூரமாக இருந்தால் அஞ்ச வேண்டும்.

உலகில் சில நாடுகள் கடந்த தசாப்த காலப்பகுதிக்குள் வெளித்தோற்றத்திற்கு வானுயர்ந்த கட்டிடங்கள், விற்பனை கடைத் தொகுதிகள். வாகனங்கள், பொழுதுபோக்கான வாழ்க்கை என்பவற்றை உருவாக்கிக் கொண்டன. ஆனால் திடீரென கடனை செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலையடைந்து தொழில் இழந்து வறுமை ஏற்பட்டு, நாட்டை விற்றும் கூட கடன் செலுத்த முடியாமல் சமூக நெருக்கடிக்குள் சிக்கியுள்ளன. அயர்லாந்து, ஐஸ்லாந்து, ஆர்ஜன்டீனா போன்ற நாடுகள் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

நாம் இலங்கையின் பொருளாதார புள்ளிவிபரங்களை ஆய்வு செய்தால் எமது நாட்டின் தனிநபர் வருமானத்தை விட தனிநபர் கடன் வேகமாக அதிகரித்து வருவதை கண்டு கொள்ளலாம்.



சலுகை கடனுக்காக அவசரமாக செலுத்த வேண்டிய (03,05,10 வருடங்கள்) அதிக வட்டியுடனான வர்த்தக கடனின் அளவு 2005 ஆம் ஆண்டின் பின்னர் ரொக்கெட் வேகத்தில் உயர்ந்துள்ளது.



குறிப்பாக செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன் தொகையை இனிமேலும் செலுத்துவதற்கு எமது வெளிநாட்டு வருமானம் போதுமானதாக இல்லை. தற்பொழுது நாம் அபிவிருத்திக்காக முதலீடு செய்வதற்காக அன்றி பழைய கடனை செலுத்தவே கூடுதலான கடனை பெறுகிறோம். கல்வி,சுகாதாரம் போன்றவற்றிற்கான செலவுகளைப்போன்று பல மடங்கு அரச வரவு செலவுத் திட்ட கடன் மாறியுள்ளது. பிரதான அரச நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குவதாக மறுபக்கம் குரல் எழுப்பப்படுகிறது. சுகாதாரம், கல்வி போன்ற சமூக சேவைகளில் பெயர்கள் செலவுகளில் மாத்திரமே காணப்படுகின்றன. குறைந்தபட்சம் நஷ்டமின்றி செயற்படக் கூடிய பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை, நீர்ப்பாசன திணைக்களம்,இலங்கை போக்குவரத்து சபை, ரயில்வே திணைக்களம், விமானச் சேவை போன்ற பல நிறுவனங்கள் அதிகளவில் நஷ்டம் அடைந்து அவற்றின் நஷ்டமானது அரசவங்கிகளின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன. இதனால் அரச வங்கிகளினால் பொது வியாபாரங்களுக்கு வழங்குவதற்கு நிதி இல்லாத நிலைமையை கடந்த இரு தசாப்தங்களாக காணக்கூடியதாக இருக்கிறது. அரச கடன் சுமையுடன் அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் கடனையும் சேர்த்தால் நாடு கடன் மலையின் மேலே அன்றி எரிமலை மீதே இருக்கிறது என்பது தெளிவாகிறது.

## கீழ்த்தரமான ஜனரஞ்சகவாதம்

இலங்கையின் அரசியல் என்பது வாக்குறுதிகள் மற்றும் அனுசரணை அரசியலுமாகும். அரசியல்வாதிகள் ஒருபக்கம் மக்களுக்கு ஜனரஞ்சகமான பிரபலமான வாக்குறுதிகளை அளிப்பர். நிலவிலிருந்து அரிசி, 8 ராத்தல் தானியம், ஜனசவிய, சமுர்த்தி, இலவச பாடப் புத்தகம், இலவச சீருடை, இலவச வீடு, இலவச நீர் மற்றும் மின்சாரம், இலவச உணவு, இலவச பசளை, இலவச வங்கிக் கடன் போன்ற நிவாரண பிணைப்பு மறுபக்கம். வாக்காளர்கள் தமது பிரதேசத்தில் விசேடமான அனுசரணைகளை அரசியல்வாதிகளிடம் எதிர்பார்ப்பார்கள். துறைமுக அமைச்சர் ஊரில் துறைமுகம் அமைப்பார். விமானச் சேவை அமைச்சர் ஊரிலே விமான நிலையம் கட்டுவார்,விளையாட்டுத்துறை அமைச்சர் ஊரில் விளையாட்டு தொகுதி நிர்மாணிப்பார். கைத்தொழில் அமைச்சரோ ஊரில் கைத்தொழில் பேட்டை உருவாக்குவார், கல்வி அமைச்சர் ஊரில் பிரபலமான பாடசாலையொன்றையோ பல்கலைக்கழகமொன்றையோ கட்டுவார். இப்படித்தான் விருப்புவாக்கு அளிக்கும் வாக்காளர்கள் விசேடமான அனுசரணையை எதிர்பார்ப்பார்கள். இதற்கிடையே அரசியல்வாதியின் உறவினர்களும் நெருக்கமானவர்களும் விசேடமான அனுசரணைகளை எதிர்பார்ப்பார்கள். சில காலம் வரை செயலாளர் பதவியோ வேறு நியமனமோ மதுபானக்கடை பேர்மிட்டோ மணல் கருங்கல் பெர்மிட்டோ கப்பமாக எதிர்பார்க்கப்பட்டது. தற்பொழுது இது சகல விதமான திட்டங்களாக (சட்டபூர்வமான மற்றும் அவ்வாறல்லாத) மாறியுள்ளது. இதே வேளை குடும்ப உறவினர்களும் நெருங்கிய நண்பர்களும் பிரதேச சபை, மாகாண சபை, பாராளுமன்றம், அமைச்சரவை, ஜனாதிபதி பதவி வரை அதிகார ஒக்டோபஸாக மாறியுள்ள குடும்ப ஆட்சி உருவாகியிருக்கிறது. இலங்கை அரசியலை ஆக்கிரமித்துள்ள இந்த கீழ்த்தரமான ஜனரஞ்சகவாதம் மற்றும் அனுசரணை பெறும் அபிவிருத்திவாதம் என்பனவே.

எமது நாட்டை விழுங்கியுள்ள கடன் எரிமலையை உருவாக்கியிருக்கிறது. எந்த வித விஞ்ஞான அடிப்படையோ பொருளாதார பிரதிபலனோ பாராது செயற்திறனற்ற உறவினர்கள் நிர்வகிக்கும் நஷ்டத்தில் இயங்க முடியாத ஆனால் நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களும் உறவினர் மற்றும் நெருங்கிய நண்பர்களினால் நாட்டிற்கு செல்வத்தை ஈட்டித் தரும் திட்டங்களை கைப்பற்றியும் கப்பம் பெற்றும் இந்த நிலையை ஏற்படுத்தியுள்ளனர். உதாரணமாக ஹம்பாந்தோட்டை துறைமுகம்,மத்தள விமான நிலையம் ,ஹம்பாந்தோட்டை மாநாட்டு மண்டபம்,சிறீலங்கன் மற்றும் மிஹின் லங்கா விமான சேவை என்பவற்றை கூறலாம்.

## மீள்வது எப்படி ?

கீழ்த்தரமான ஜனரஞ்சகவாதத்திற்குப் பதிலாக எதிர்கால சந்ததி குறித்து பாசமுள்ள மக்கள் மயமொன்றை நாம் அறிமுகம் செய்ய வேண்டும். முன்னுரிமை அடிப்படையிலும் தேசிய பௌதீக திட்டமிடலுக்கும் அமைவாகவே நாட்டில் விமானநிலையம்,துறைமுகம், வீதி, நகரம், மின்சாரம், நீர், தொலைபேசி போன்ற அனைத்தும் உருவாக்கப்பட வேண்டும். இதன்போது, முதலீட்டை ஈடு செய்வது எவ்வாறு? கிடைக்கும் வருமானம் எவ்வளவு? தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பு என்ன? மக்களின் வருமானம் எவ்வாறு உயரும் என்பன குறித்தும் கவனம் செலுத்தக் கூடிய விஞ்ஞானபூர்வமான மதிப்பீடு அவசியமாகிறது.

வறுமையும் தொழில் இன்மையும் சகல தேர்தல்களிலும் பிரதான வாக்குறுதியாக பயன்படுத்தப்படும் இரு பிரச்சினைகளாகும். வறுமை ஒழிப்பிற்கு பல்வேறு திட்டங்கள் இருந்த போதும் சமூகத்தில் இன்னும் ஓரங்கட்டப்பட்ட பாரிய குழுவொன்று இருக்கவே செய்கிறது. வீதியோர பிச்சைக்காரர்கள், குடிசைவாசிகள், போதைக்கு அடிமையானவர்கள், உடல் உள ரீதியில் பலவீனமானவர்கள், பாலியல் அடிமைகள், கைவிடப்பட்ட குழந்தைகள், முதியோர் போன்றோர் மனிதத்தூசுகளாக மாறியிருக்கிறார்கள். முதலில் இவர்களுக்கு மனித நேயத்தை வழங்க வேண்டும்.சகலரும் உள்ளடங்கும் சமூக பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும்.

குடும்ப ஆட்சி மற்றும் நெருங்கிய நட்பு என்பனவே அரசியல் ரீதியில் நாடு முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினையாகும்.சில வேளை உறவினர்கள் மற்றும் நண்பர்கள் இடையில் திறமையான செயற்திறன்மிக்க நேர்மையான நபர்கள் இருக்கக் கூடும். ஆனால் திறமைக்கு முன்னுரிமை வழங்கும், திறமை அடிப்படையில் நியமனம், பதவி உயர்வு வழங்கும் அரச துறையும் அரசியல் சம்பிரதாயமும் தான் நாட்டுக்கு அவசியம். கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள், தொழில்முயற்சியாளர்கள், மற்றும் வியாபார சமூகம் என்பவற்றில் திறமைத்துவவாதம் செயற்படுகிறது. அரசியலில் மாத்திரமே அது பின்பற்றப்படாதுள்ளது. அதனை கட்டாயம் செயற்படுத்த வேண்டும். நாட்டின் அரசியலில் தொற்றியுள்ள எயிட்ஸ் வைரஸும் புற்றுநோயும் தான் குடும்பவாதமும் நெருங்கிய நட்புவாதமுமாகும்.

சூழலினால் சவாலுக்குட்பட்டுள்ள விசேட உயிரினமாகவே நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.மண்,நீர்,காற்று என்பன இன்று நஞ்சாகிவிட்டன. அனல் மாசு காரணமாக அதிக மழை, வரட்சியுடனான நீர் என்பன மனஉளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. கடல் நீர் கசிவு,மண்சரிவு, உயிரினங்கள் அழியும் அபாயம் மற்றும் ஆக்கிரமிப்பு தாவரங்கள் மற்றும் உயிரினங்களினால் எமது இருப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் சகலவற்றையும் வெற்றிகொள்ளும் என ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் வரை உலகம் கருதியது. எவ்வாறாவது செல்வம் சேர்த்தால் சூழல் பிரச்சினைக்கு, பின்னர் தீர்வு காணலாம் என்று கருதப்பட்டது.

சூழலுக்கு உகந்தவாறான தொழில்நுட்பம்,நகரம் மற்றும் வாழ்வை நோக்கிய பயணிக்காவிட்டால் இன்னும் ஐந்து தசாப்தங்களில் எமது பிள்ளைகளுக்கு பூமி நரகமாக மாறிவிடும் என கற்றறிந்த உலகம் தற்பொழுது கருதுகிறது. ஆகையினால் கீழ்த்தரமான ஜனரஞ்சகவாதத்திலிருந்து மீண்டு மக்கள்மய நிரந்தர அபிவிருத்திக்கு நாம் அர்ப்பணிக்க வேண்டும்.

## எமது பாதை

எனது 4 தசாப்த அரசியல் பயணத்திலும் ஒன்றரை தசாப்த பாராளுமன்ற வாழ்விலும் 12 வருட அமைச்சு பதவிகளிலும் மேற்குறிப்பிட்ட கொள்கைகளை நான் உச்ச அளவில் பாதுகாத்தேன். உறவினர் அல்லது நெருங்கிய நண்பர்கள் என்பதற்காக மாத்திரம் எவருக்கும் பதவிகள் வழங்கவில்லை. சகல அமைச்சுகளிலும் நபர்களையும் நிறுவனத்தையும்

மதிப்பீடு செய்யும் முறை பின்பற்றப்பட்டது. குறிப்பாக திறைசேரிக்கு சுமையேற்றாமை மற்றும் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்தும் நோக்குடன் அரச நிறுவனங்கள் செயற்படுத்தப்பட்டன. எனக்கு உயர்மட்ட அரசியல் தலைமைத்துவத்தின் அனுசரணை இரு தடவைகள் தொடர்ச்சியாக கிடைத்தது.(2007-10 மற்றும் 2015 ஆண்டுகள்) சில போது அரசியல் தலைமை எனக்கு பாதகமாக சென்றது.(2011-14) ஆனால் நான் எங்கும் முறையிடாது பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கான புதிய வழிகளை தேடிச் சென்றேன்.2016 ஆம் ஆண்டு மாநகர அமைச்சு வழங்குகையில் மேல்மாகாண அதிகாரசபை எனும் சட்டபூர்வ நிறுவனம்(மகாவலி அதிகார சபை போன்ற) ஒன்றை வழங்குவதாக அரசியல்தலைமைத்துவம் வாக்குறுதியளித்திருந்தது. ஆனால் அவ்வாறான நிறுவனம் உருவாக்கப்படவில்லை.திறைசேரியும் போதியளவில் அமைச்சிற்கு பங்களிக்கவில்லை. ஆனால் நாம் தைரியத்தை கைவிடாது அமைச்சினால் திட்டமிடப்பட்டிருந்த அல்லது தடைப்பட்டிருந்த திட்டங்களை பொறுப்பேற்று புதிய அமைச்சொன்றை உருவாக்கினோம்.

துறைமுக நகர திட்டம், துறைமுக அதிகார சபையினூடாக முன்னெடுக்கப்பட்டாலும் சர்வதேச மற்றும் தேசிய அளவில் அது தடைப்பட்டிருந்த திட்டமாகும். ஆனால் நாம் சகல சவால்களையும் வெற்றி கொண்டு முதல் கட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருக்கிறோம். தொழில்நுட்ப நகரமானது கல்வி மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கருத்திட்டமாக இருக்க வேண்டிய பாரிய திட்டமாகும். இளம் அரசியல்வாதிகளின் எதிர்ப்பிற்கு மத்தியில் நாம் இது தொடர்பில் பலமான அடித்தளமொன்றை இட்டோம்.இலகு ரயில் சேவையானது போக்குவரத்து அமைச்சினூடாக முன்னெடுக்கப்பட வேண்டிய பாரிய திட்டம்.ஆனால் அவர்களின் ஒத்துழைப்புடன் நாம் அதனை முன்னெடுத்திருக்கிறோம்.

பஸ் நவீனமயப்படுத்தும் திட்டம் ஜனாதிபதி செயலகத்தினூடாக எமக்கு கிடைத்த திட்டமாகும். அதனையும் ஆரம்பித்திருக்கிறோம்.பல்தேவை போக்குவரத்து மத்திய நிலையம் நகர அபிவிருத்தியின் அங்கமாக உள்ளபோதும் அது போக்குவரத்து நெடுஞ்சாலை சார்ந்த அம்சமாகும். பிரவர்ஜன நகரம் துறைமுகத்துடன் தொடர்புள்ள கொள்களன் மற்றும் திரவ களஞ்சியம்சார்ந்த திட்டமான போதும் அதனையும் செயற்படுத்திவருகிறோம். கொழும்பு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் கால்வாய் அபிவிருத்தியானது நீர்ப்பாசன திணைக்கள பணியான போதும் சுரங்கப்பாதை மற்றும் பம்பி நிலையத்துடன் கூடிய அந்த திட்டத்தையும் வெற்றிகரமாக முன்னெடுத்துவருகிறோம். கழிவு முகாமைத்துவமானது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சுடன் தொடர்புள்ள விடயமாகும். மீதொட்டமுல்ல குப்பை மேடு உடைந்து விழுந்து டெங்கு அச்சுறுத்தலுக்கு நகரம் பலியாகையில் அந்த சவாலையும் வெற்றி கொள்ள முடிந்தது. நகர குடிசைவாசிகளுக்கு வீடமைத்துக் கொடுப்பது அரசாங்கத்தினதும் வீடமைப்பு அமைச்சினதும் பணியாகும். அரசாங்கத்தின் பாரிய பங்களிப்பு இன்றி வரலாற்றில் பெரும் நகர அபிவிருத்தி வீடமைப்பு திட்டத்தை சுய முதலீட்டாக முன்னெடுத்து நிரந்தரமாக செயற்படுத்தியிருக்கிறோம். அரச பொது நிர்வாக கட்டிட நிர்மாணத்தை கூட நகர அபிவிருத்தி அதிகார சபை முதலீட்டின் கீழ் மேற்கொண்டோம்.


அரச நிதியில் அற்புதமான நிர்மாணங்கள் மேற்கொள்வது கஷ்டமான விடயம். வருமானம் ஈட்டி அற்புத நிர்மாணம் செய்வது அதனை விட கடினமானது. ஆனால் தேசத்தின் மீது கடன் சுமத்தாத அந்த மிக கடினமான பாதையை தான் நாம் தெரிவு செய்தோம்.

பௌதீக திட்டமிடலின் அடிப்படையில் திறமைக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட்டதால் தான் ஆசிய மற்றம் ஐரோப்பியவில் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வெற்றிகரமான முன்மாதிரி நாடுகள் (சுவீடன், நோர்வே, பின்லாந்து, தாய்வான், தென்கொரியா, சிங்கப்பூர்) அந்த நிலையை அடைந்துள்ளன.

அவர்களின் சமூகத்தில் மனிததூசி இல்லாதிருப்பதற்கும் சுற்றாடல் பாதுகாப்பு இருப்பதற்கும் சுகாதார, கல்வி, புத்தாக்கம் போன்றவற்றிற்கு பாரிய முதலீடு

செய்வதற்கும் அவ்வாறான பொருளாதார பலமே காரணமாக அமைந்தன. நாமும் எமது நாட்டின் கலாசாரம் மற்றும் சுற்றாடல் என்பவற்றுடன் ஒன்றி போட்டித்தன்மையான அபிவிருத்திப் பாதைக்கு பிரவேசிக்க வேண்டும். நாம் மோசடியை ஒழித்தல், வருமானம் ஈட்டல் என்பவற்றின் அடிப்படையில் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்தல், திறமைக்கு முன்னுரிமை வழங்கல், தொடர்ச்சியான மீளாய்வு என்பவற்றை பேச்சுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாது நடைமுறைச்சாத்தியமாக்க வேண்டும். இந்தக் கொள்கை நாட்டில் சகல துறைகளிலும் செயற்படுமானால், இலங்கை கீர்த்தியும் மகிமையும் மிக்க இடமாக மாறுவதை தடுக்க முடியாது. நாட்டிலுள்ள கற்ற, கல்லாத சகலருக்கும் விருப்பத்திற்குரிய இடமாக மாறும். இதனை எமது ஆயுட்காலத்திலேயே எட்டக்கூடிய நிலைமையாகும். இதற்காக எம்மை அர்ப்பணிக்க வேண்டும். இலங்கை வெற்றிபெற்றுள்ள சகல துறைகளிலும் (யுத்தம், உலக கிரிக்கெட் கிண்ணம்) திறமைக்கு முன்னுரிமை கொடுத்தே அவற்றை அடைய முடிந்துள்ளது.

**"முழு நாட்டையும் அப்பாதைக்குக் கொண்டுவர காலம் கனிந்துள்ளது"**





# தேசப்பற்றாளர்

மூன்று தசாப்தங்களாக தாய்நாட்டின் மீது இரத்த ஆறு ஓடிய அபகீர்த்தியான யுத்தத்திற்கு முடிவுகட்டுவதும் அதற்கு காரணமான பிரிவினைவாத பயங்கரவாதத்தை தோற்கடிப்பதும் எம்முன்பிருந்த பிரதான சவால்களாகும். பல்வேறு தரப்புகளும் பயங்கரவாதத்தின் முன்பாக கோழை மனநிலையுடன் இருக்கையில் பயங்கரவாதத்தை தோற்கடிக்க வேண்டும், தோற்கடிக்க முடியும் என்ற கருத்தை சமூகமயப்படுத்தி அதனை நிறைவேற்றுவதற்காக அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

சமஷ்டி ஆட்சிக்கு சார்பாக இரு பிரதான கட்சிகளும் குரல் கொடுக்கையில் நாட்டின் ஒருமைப்பாட்டை அங்கீகரிப்பதற்கு வழிவகுத்து தேசிய அபிப்பிராயத்தை உருவாக்கியவர் அவர். நிறைவேற்று ஜனாதிபதியின் எல்லையற்ற அதிகாரங்களை மட்டுப்படுத்துவற்காக முன்னெடுத்த போராட்டத்தை நடைமுறைச்சாத்தியமாக்குவதில் அவரின் தலையீடு பிரதானமாக அமைந்தது. தேசிய சாசன முரண்பாடுகளின் போது நேரடியாக தலையீடு செய்த அவர், பல்வேறு சமூக குழுக்களிடையே சமத்துவத்தை கட்டியெழுப்புவற்காக அதிகளவில் பாடுபட்டார்.



# துணிச்சல்காரர்

மூன்று தசாப்தங்களாக விரியும் அரசியல் பயணத்திற்கு மத்தியில் உண்மையான துணிச்சல்காராக இருந்தார். ஏனையவர்கள் கைவைக்க அஞ்சிய இருண்ட மூளைமுடுக்குகளையும் ஆய்வுசெய்த, அதற்கு எதிராக எழுந்து நின்ற அவர், ஒருபோதும் தனது இலக்கிலிருந்து உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் ஒருபோதும் பின்வாங்கவில்லை. தேசத்தின் அழிவிற்கும் பின்னடைவிற்கும் காரணமாக அமைந்த கெசினோ, நச்சுள்ள பால்மா, ஆசனிக்,எதனோல்,போதைப்பொருள்,சிகரெட் போன்ற சக்திகளுக்கு எதிராக அயராது போராடிய அவர் அவற்றின் குரூர ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை மீட்பதற்கு பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். நல்லாட்சியை நாட்டிற்கு முன்வைத்து அதிகார ஆசை,குடும்ப ஊழல் என்பவற்றுக்கு எதிராக தர்க்க ரீதியில் துணிச்சலுடன் போராடினார். இன நல்லிணக்கத்தை குழப்பும் சக்திகள் தலைதூக்கிய போதெல்லாம் அதற்கு எதிராக அரசியலில் இருக்கும் ஒட்டுண்ணி நிலையை ஒழிக்கவும் அச்சமின்றி முன்னிலை வகித்த அவர் இலங்கை அரசியலில் துணிச்சலின் உண்மையான அடையாளமாக திகழ்கிறார்.



# கொள்கைப்பிடிப்புள்ள தலைவர்

தனது அரசியல் பயணத்தில் ஒருபோதும் சுயநல அடிப்படையில் குறுக்குவழிகளை தேடாத அவர் கௌரவமான அரசியலில் பிரதானமான இலட்சணமான கொள்கையை மதிக்கும் தலைமைத்துவமாக விளங்கினார். அரசியல் சம்பிரதாயம்.கலாச்சார அடிப்படைகளை பின்பற்றி நவீனத்துவத்தின் சாதகமான பண்புகளை அதனுடன் கலந்து இலங்கையை உலக வரைபடத்தில் சிறப்பான இடத்திற்கு உயர்த்துவதை தனது பிரதான கொள்கையாக கொண்டார். 2005,2010 போன்று 2015 ஜனாதிபதி தேர்தல்களின் போது வெளியிடப்பட்ட கொள்கை பிரகடனங்களுக்கு ஆக்கபூர்வமான திட்டங்கள்,யோசனைகள் அவரினாலே முன்வைக்கப்பட்டன. சிறந்த தேசமொன்றை உருவாக்குவதற்காக முன்னெடுக்கும் போராட்டங்களில் எந்த தரப்பு, எந்த நிறம், எந்த இலட்சினையின் கீழ் இருந்தாலும் அவரின் கொள்கை பலமான பின்வாங்காத ஒன்றாகவே இருந்தது.



# யதார்த்தவாதி

மோசடிக்கு வேலிபோட்டு, நவீன முகாமைத்துவ முறைமைகளை அறிமுகம் செய்து செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகள் உருவாக்கி,வீழ்சியடைந்த அரச நிறுவனங்களை கட்டியெழுப்புவதற்கு உகந்த புதிய நிறுவன கலாசாரமொன்றை உருவாக்கியவர்.அவர் தலைமைத்துவம் வழங்கிய சுற்றாடல் மற்றும் இயற்கை வள,மின்சக்தி மற்றும் எரிசக்தி,தொழில் நுட்ப மற்றும் ஆய்வு,மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழான நிறுவனங்கள் முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றார்.இறுதியில் அவற்றை லாபமீட்டும்,நாட்டுக்கு சுமையேற்றாத நிறுவனங்களாக மாற்றியமைத்தார்.இலங்கையில் சுற்றாடல் துறையை சர்வதேசத்தின் உச்சத்திற்கு உயர்த்தி நாட்டிற்கு நற்பெயரை ஈட்டிக் கொடுத்தார்.பசுமை எரிசக்திக்கு முன்னுரிமைவழங்கும்புதியமின்சாரக்கொள்கையைஆரம்பித்து நாட்டிற்கு 100 வீதம் மின்சாரத்தை பெற்றுக் கொடுத்ததோடு அதிகரிக்கும் கேள்வியை கட்டுப்படுத்துவதற்காக பாதுகாப்பு முறையை அறிமுகம் செய்தார்.எரிபொருள் துறையில் மோசடி, செயற்திறனின்மை,என்பவற்றை கட்டுப்படுத்தி அதன் பலனை நிவாரண எரிபொருள் விலையாக மாற்றி பொதுமக்களுக்குப் பெற்றுக் கொடுத்தார். தொழில் நுட்ப மற்றும் ஆய்வு துறையை யதார்த்தபூர்வமாக்கி அதன் பலனை கீழ்மட்டம் வரை கொண்டு சென்று சிறு மற்றும் மத்திய கைத்தொழிலாளர்களை பலப்படுத்தினார். மாநகரங்களுக்காக முறையான திட்டமொன்றை தயாரித்த அவர் அரசாங்கத்திற்கு சுமையாகாது நகர நிர்மாணத்திற்காக தனியார்-அரச முதலீட்டை பெறக்கூடிய புதிய முறைமையொன்றை கொண்டுவந்தார். நிதி நகரம்,தொழில்நுட்ப நகரம்,வர்த்தக நகரம், இலகு ரயில் சேவை என்பன அவற்றில் பாரிய முதலீட்டு திட்டங்களாகும்.



# தொழில்முயற்சியாளர்

அறிவிலிகள்,குண்டர்கள்,நாகரிகமற்றவர்கள், அரசியல் உலகை ஆளும் காலகட்டத்தில் உண்மையான ஆளுமையை இலங்கை அரசியலுக்கு கொண்டுவந்தார். மொரட்டுவ பல்கலைக்கழக பொறியில் பீடத்தில் பட்டம் பெற்று மின் பொறியியல் பட்டம்பெற்ற அவர் சில காலம் திறந்த பல்கலைக்கழக பொறியியல் கணிதம் தொடர்பான விரிவுரையாளராக பணியாற்றினார். பௌதீக விஞ்ஞானம், தத்துவம்,கணிதம், புத்தசமயம், சுற்றாடல், எரிசக்தி, தேசிய மரபுரிமை,அரசியல் போன்ற பலவற்றிடையே நடமாடிய அவர் பல்வேறு துறைகள் தொடர்பில் எழுதிய நூல்கள் 6 ற்கும் அதிகமானவை. வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கைகள் ஏராளம்.கைத்தொழில் புரட்சியின் நான்காவது யுகத்தில் இலங்கை தோல்வியடையாதிருக்க வேண்டுமானால் தொழில் நுட்பவியலாளர்கள், தொழில்முயற்சியாளர்கள், நாட்டின் வழிசாட்டிகளாக இருக்க வேண்டும் என்று கூறி அதற்கு பலமான சக்தியை வழங்கினார்.

# பாட்டலி சம்பிக ரணவக்கவினால் வழிநடத்தப்பட்ட அமைச்சுக்கள்

**சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சு**
(2007-04-29 முதல் 2010-01-30 வரை)

**மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு**
200-04-29 முதல் 203-01-30 வரை

**தொழில்நுட்ப மற்றும் ஆய்வு அமைச்சு**
2013-01-31 முதல் 2014-11-18 வரை

**மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு**
205-01-31 முதல் 2015-09-07 வரை

**மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு**
2015-09-08 முதல் இன்று வரை

# சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைசசுப் பொறுப்பு

(2007-2010)



# பசுமை நிறைந்த நாடு




சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சு

- சமுத்திர பாதுகாப்பு அதிகாரசபை
- வன பாதுகாப்பு திணைக்களம்
- பூகற்பவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம்

- வனஜீவராசிகள் திணைக்களம்
- அரச மரக் கூட்டுத்தாபனம்
- மத்திய சுற்றாடல் அதிகார சபை
- இலங்கை வனஜீவராசி பொறுப்பு

2007-02-01 முதல் 2010-04-28


National
Action Plan
for
Haritha Lanka
Programme
2010
2020
National Council for Sustainable Development
Presidential Secretariat, Colombo 01.
Convener: Ministry of Environment and Natural Resources,
82, "Sampathpaya", Rajamalwatta Road, Battaramulla.

2008 உடன் ஒப்பிடுகையில் இலங்கையில் வளி மாசடைவது படிப்படியாக குறைந்து வருவதாக அமெரிக்க,நிவ் ஹவனிலுள்ள யாலே பல்கலைக்கழக ஆய்வாளர்கள் அண்மையில் வெளியிட்ட வருடாந்த உலக சுற்றாடல் செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2008 ஆம் ஆண்டு சுற்றாடல் அமைச்சராக பணியாற்றிய போது வளிமாசடைவதை தடுப்பதற்கான பிரிவை பலப்படுத்துவதற்காக போக்குவரத்து அமைச்சினூடாக புகை பரிசோதனை திட்டமொன்றை ஆரம்பித்து சகல வாகனங்களிலும் புகை பரிசோதனையை கட்டாயமாக்கியதாலே இலங்கைக்கு இவ்வாறான சாதகமாக சுற்றாடல் தகவலொன்று வெளியிடப்பட்டிருக்கிறது. தற்பொழுது சுற்றாடல் பாதுகாக்கப்படுவதை பார்த்து ஆத்மீக ரீதியான மகிழ்ச்சி ஏற்படுவதை தவிர்க்க முடியாது..

**பாட்டலி சம்பிக்க ரணவக்க**



- ஓசோன் படலத்தை பாதுகாப்பதற்காக வியான உடன்படிக்கையின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட தோடு ஓசோன் படலத்தை பாதுகாப்பதற்காக சிறந்த திட்டத்தை முன்வைத்ததற்காக மொண்டியல் அமைப்பின் சர்வதேச விருது 2008 இல் தேசிய ஓசோன் பிரிவுக்கு பெற்றுக் கொடுத்தமை

- கழிவினால் அசுத்தமாகாத கழிவுகளற்ற நகரத்தை உருவாக்குவதற்காக இலங்கையில் முதன்முதல் சுகநல கழிவு சேகரிப்பு ஒன்றை தொம்பே பிரதேசத்தில் நிர்மாணித்து முறையானதும் விஞ்ஞான பூர்வமானதுமான கழிவு முகாமைத்துவத்திற்கு அடித்தளமிட்டு 'பிலிசரு' திட்டத்தை முன்னெடுத்தமை, மற்றும் சிறு, மத்திய மற்றும் 100 பாரிய இயற்கை பசளை தொகுதிகள் நாடுபூராவும் உருவாக்கியமை, திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் கொள்கையொன்றை அறிமுகம் செய்தமை.

- 'பிரியகரு புரவரய' திட்டத்தின் கீழ் நாடுபூராவும் 12 நகர பூங்காக்களை உருவாக்கியதோடு 8 தேசிய பூங்காக்களை உருவாக்கியமை

- இலங்கையில் முதன் முறையாக வாகனங்களுக்காக புகை வெளியேற்றல் சான்றிதழ் பெறுவதற்கு போக்குவரத்து அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுத்தமை. இதனூடாக டில்லி நகருக்கு ஏற்பட்ட நிலைமை கொழும்பு நகருக்கு ஏற்படாமல் பாதுகாத்தமை.

- 'ரன் தெரண' திட்டத்தின் ஊடாக இயற்கை வளங்களாக கருதப்படும் உள்நாட்டு வர்த்தகப் பொருட்களை மூலப் பொருட்களாக அன்றி பெறுமதி சேர்த்து அவற்றின் பெறுமதியை உறுதி செய்து ஏற்றுமதி செய்வதற்காக கைத் தொழிலாளர்களை தொடர்புபடுத்தியமை. உள்நாட்டு

மணல் தேவையை மதிப்பீடு செய்து அதற்காக கடல் மணல் போன்ற மாற்ற வழிகளை பழக்கப்படுத்த நடவடிக்கை எடுத்தமை. பூகற்பவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தை லாபமீட்டும் நிறுவனமாக மாற்றியமை.

- 'வன செனசுன' திட்டத்தின் கீழ் 13 மாவட்டங்களில் 70 வன மடாலயங்களை உருவாக்கியமை

- காலநிலை மாற்றம் குறித்து ஆராய்வதற்காக தனியான செயலக அலுவலகம் ஸ்தாபித்தமை. காபன் நிதியம் அமைத்தமை

- 'பசுமை கிராமம்' திட்டத்தின் கீழ் சிறு நீரேந்து பிரதேசங்களை மேம்படுத்தியமை, 400 சூரிய மின் உற்பத்தி பிரிவுகளை 17 மாவட்டங்களில் உருவாக்கியமை,மாற்று எரிசக்தி மூலங்களாக 65 இயற்கை வாயு பிரிவுகள் ஏற்படுத்தியமை நாடளாவிய ரீதியில் 112 சுற்றாடலுக்கு உகந்த விவசாயங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தமை

- நிரந்தர மனித அபிவிருத்தி சுட்டியை முன்வைத்தமை மற்றும் அது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டுவந்தமை

- பசுமை வழிகாட்டிகளாக 56,000 முதல் 600.000ற்கும் அதிகமான பாடசாலை மாணவர்களை இணைத்து சுற்றாடல் பாதுகாப்பின் பக்கம் மாணவர்களை ஈடுபடுத்தியமை.

- 'தெவ ஜவய' திட்டத்தின்கீழ் பூஸ்ஸ மரப் பொருட்கள் உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்தமை பொரலந்தவில் மர ஆய்வுநிலையமொன்றை உருவாக்கியமை.

- வெளிநாட்டிலிருந்து மின்கம்பங்கள்,ரயில் சிலீப்பர் கட்டைகள் என்பவற்றை இறக்குமதிசெய்வதற்குப் பதிலாக உள்நாட்டில் தயாரித்து அவற்றை வழங்கியமை,மரக் கூட்டுத்தாபனத்தை லாபமீட்டும் நிறுவனமாக மாற்றியமை

- 'ஜீவ ஜவய' திட்டத்தின் கீழ் ஆமணக்கை பயன்படுத்தி இருந்து எமது நாட்டு உயிரியல் எரிபொருள் உற்பத்தியின் பக்கம் தனியார் துறையையும் பிரதேச மக்கள் குழுக்களையும் ஊக்கப்படுத்தியமை

- 'ஹெல துரு வியன' திட்டத்தின் கீழ் பைனஸ் மரங்களை அகற்றி உள்நாட்டு தாவர வகையான ஹொர தாவரத்தை நட்டமை மற்றும் அதற்காக ஆய்வு நிலப் பிரதேசமொன்றை உருவாக்கியமை

- 'கஜ மிதுரு' திட்டத்தின் கீழ் யானை-மனிதன் மோதலை மட்டுப்படுத்துவதற்காக வசதிகள் அளித்தமை,லுணுகம்வெஹெர யானை தடுத்துவைக்கும் பிரதேசம் ஆரம்பித்தமை, 600 கிலோ மீட்டர் நீள மின்சார வேலி உருவாக்கியமை, வனங்களை இணைத்து யானைகள் அடங்கலான மிருகங்கள் இடமாற்ற யானை கடவை உருவாக்கிமை

- பயங்கரவாத கட்டுப்பாட்டில் இருந்து மீட்க்கப்பட்ட உடவலவ, லுணுகம்வெஹெர, யால, வில்பத்து வனங்களை நவீனமயப்படுத்தியமை, புதிய வன பூங்காக்களை அமைத்தமை

- இற்றைப்படுத்தப்பட்ட பலம்வாய்ந்த இலங்கை ஒன்றிற்காக சுற்றாடல் சமுத்திர மாசு தடுப்பு சட்டம், வன ஜீவராசிகள் மற்றும் விருட்ச கட்டளைச் சட்டம், வன கட்டளைச் சட்டம், சுரங்க மற்றும் வர்த்தக பொருள் சட்டம், தேசிய சுற்றாடல் சட்டம் என்பவற்றை திருத்த தலைமைத்துவம் வழங்கியமை

- நிரந்தர அபிவிருத்தி மூலோபாயத்திற்காக பசுமை லங்கா தேசிய செயற்திட்டம் (2010-2020) அறிமுகப்படுத்தியமை

- சுற்றாடல் பாதுகாப்பு வரி சட்டத்தை அறிமுகம் செய்து அந்த வரிப் பணத்தை கழிவு முகாமைத்துவத்திற்கு பயன்படுத்தியமை, பிளாஸ்ரிக், பொலிதீன் பயன்பாட்டை மட்டுப்படுத்தியமை.



### உங்களுக்குத் தெரியுமா ?

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் பொறுப்பாக இருந்த கொழும்பு கழிவு முகாமைத்துவம் முழுமையாக செயலிழந்திருந்த நிலையில் 2018 ஆம் ஆண்டு மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சிற்கு அந்தப் பொறுப்பு கையளிக்கப்பட்டது. இதற்கு நிரந்தர தீர்வு வழங்கும் வகையில் எதிர்வரும் 100 வருடங்களுக்கு முறையான கழிவு முகாமைத்துவம் மேற்கொள்வதற்காக புத்தளம் அருவக்காட்டில் பாதுகாப்பான கழிவு குவிக்கும் இடம் நிர்மாணிக்கப்படுகிறது. அந்த பணிகளை இந்தப் படத்தில் காணலாம்.


அரச மரக்கூட்டுத்தாபன நிதி செயலாற்றுகை
4000 M
3000 M
2000 M
1000 M
0
2105
1967
138
2531
2381
150
2986
2704
282
3445
3086
359
2006
2007
2008
2009
வருமானம்
செலவு
லாபம்


பூகற்பவியல் மற்றும் சுரங்கப் பணியக நிதி செயலாற்றுகை
700 M
600 M
500 M
400 M
300 M
200 M
100 M
0 M
229
111
118
354
126
228
491
171
320
627
242
386
2006
2007
2008
2009
வருமானம்
செலவு
லாபம்


විදුලිබල හා බලශක්ති අමාත්‍යාංශය
බලශක්තියෙන් සවි ගැන්වූ දේශයක්
දැනුම් කේන්ද්‍රීය ආර්ථිකයක් සඳහා
ශ්‍රී ලංකාවේ බලශක්ති සංවර්ධන
සැලැස්ම
2015-2025

“ 2010 ஆம் ஆண்டில் இலங்கை மூன்று நெருக்கடிகளுக்குள் மின்சார துறை சிக்கியிருந்தது. 24 மணிநேரம் 7 நாட்கள் தொடர்சியாக மின்சாரம் வழங்கல்,100 வீத மின்சாரம் வழங்கல்,மின்சார சபை நஷ்டம் மற்றும் நிதி நெருக்கடி என்பனவே அவையாகும். இவை அனைத்தையும் மின்சார சபைக்குள்ளேயும் வெ ளியேயும் இருக்கும் மின்சார மாபியாவுடன் மோதி ஒழுக்கக் கட்டுப்பாடுள்ள ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து வெற்றி கொள்ள எமக்கு முடிந்தது. ”

**பாட்டலி சம்பிக்க ரணவக்க**



- இலங்கைக்கு 100 வீதம் மின்சாரம் வழங்குவதற்காக 'விதுலமு லங்கா' திட்டத்தை முன்னெடுத்து நாடுபூராவும் 6 இலட்சம் புதிய மின் இணைப்புகளை வழங்கியமை

- ஆசியாவில் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கும் ஒரே நாடாக இலங்கையை மாற்றியமை

- மின்சார சபையின் நிதி நெருக்கடியில் இருந்து மீட்டு லாபமீட்டும் நிறுவனமாக மாற்றியமை

- முதற்தடவையாக தேசிய மின்கட்டமைப்பிற்கு சூரிய மற்றும் காற்று மின் உற்பத்தி நிலையங்களை அறிமுகம் செய்தமை

- டீசல் மூலம் இயங்கும் தனியார் மின்உற்பத்தி நிலையங்களில் ஏகபோக உரிமையை தடுத்து எரிபொருள் மாபியாவிலிருந்து மின்சாரசபையை மீட்டமை மற்றும் அதிக செலவுடைய சகல தனியார் மின் உற்பத்தி நிலையங்களையும் மூடியமை

- மன்னார் கடற்படுகையிலிருந்து எரிபொருள் மற்றும் வாயு என்பவற்றை கெரவலபிடியவிற்கு கொண்டு செல்வதற்கு முறையான திட்டமொன்றை தயாரித்து முன்வைத்தமை



- 2030இல் எரிசக்தியில் தன்னிறைவுவடைந்த நாடாகுவதற்கான முதலாவது எரிசக்தி முலோபாய திட்டத்தை முன்வைத்தமை

- அவசர கொள்வனவு மற்றும் நீண்ட கால கொள்வனவு என்பவற்றுக்கிடையில் சமநிலையை ஏற்படுத்தி நிலக்கரி மாபியாவை அகற்றியமை

- நிறுவன ஊழியர்களை பயன்படுத்தி 43 நாட்களில் பிரதான எண்ணெய் குழாயை புனரமைத்தமை

- எண்ணெய் கேள்விமனு கோரலை முறைப்படுத்தி நிதி அடிப்படையில் பெற்றோலிய கூட்டுத் தாபனத்தை மீட்டு வரலாற்றில் முதற்முறையாக எரிபொருள் விலையை குறைத்தமை


- வீடுகளில் பயன்படுத்தும் சூரிய மின்சக்தி மற்றும் தேசிய கட்டமைப்பு ஆகிய இரண்டையும் பயன்படுத்தி அவற்றுக்கிடையில் சமநிலையை ஏற்படுத்தக் கூடிய விசேட மாணிவாசிப்புமுறையொன்றை அறிமுகம் செய்தமை

- எரிசக்தி பாதுகாப்பிற்காக மக்களை தூண்டுவதற்காக 'மக்கள் மின்உற்பத்தி நிலைய' திட்டத்தை அறிமுகம் செய்தமை மற்றும் அதற்காக பாடசாலை மாணவர்களை இணைத்துக் கொண்டமை. 24 இலட்சம் பாவனையாளர்கள் பங்கேற்ற இந்த திட்டத்தினூடாக 2012 இல் 4 வீதம் மின்சாரம் சேமிக்கப்பட்டது. கேள்வியை முகாமைத்துவம் செய்வதினூடாக கட்டுப்படுத்தப்பட்ட மின்சார கேள்வியை அடுத்த 5 வருடங்களுக்கு வீட்டுபாவனை மட்டத்தில் பேணமுடிந்தமை.



2015 ஆம் ஆண்டு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சை நான் பொறுப்பேற்ற போது மின்சார சபையின் வருடாந்த நஷ்டம் 11,423 மில்லியன்களாகும். மின்சார சபைக்குள்ளேயும் வெளியேயும் இருந்து வந்த சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுத்து 8 மாத காலத்தினுள் 20,002 மில்லியன் ரூபா லாபம் ஈட்டி மின்சார சபையை மீள உயர்த்தி வைக்க முடிந்தது மகிழ்ச்சிக்குறிய விடயமாகும். ஆனால் எமது நிர்வாகத்தின் பின்னர் (2015 இன் பின்னர்) அந்த செயலாற்றுகையை பேண முடியாமல் போயிருப்பது புள்ளிவிபரங்களின் பிரகாரம் தெளிவாகிறது.

இலங்கை மின்சார சபை நிதி செயலாற்றுகை (ரூ.மில்)




# தொழில் நுட்ப மற்றும் ஆய்வு அமைச்சுப் பொறுப்பு

(2013 - 2014)



# புத்தாக்கத்தினூடாக பலமடையும் எதிர்காலம்




விஞ்ஞான, தொழில் நுட்ப மற்றும் ஆய்வு அமைச்சு

NASTEC ACC NIFS CISIR NRC SLAB

- நவீன தொழில் நுட்பம் தொடர்பான ஆதர் சி கிளார்க் நிறுவனம்
- கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
- அடிப்படை ஆய்வு நிறுவனம்
- தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையம்
- தேசிய ஆய்வு மத்திய நிலையம்
- தேசிய விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப ஆணைக்குழு
- தேசிய விதாத மன்றம்
- கோள் மண்டபம்
- மதிப்பீடு தொடர்பான இலங்கை அங்கீகார சபை
- இலங்கை புத்தாக்குநர் சபை
- இலங்கை கட்டளைகள் நிறுவனம்


2013-01-31 முதல் 2014-11-18


NATIONAL RESEARCH
AND DEVELOPMENT
INVESTMENT
FRAMEWORK
BACKGROUND AND JUSTIFICATION
MINISTRY OF TECHNOLOGY AND RESEARCH



"தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுத் துறை என்பவற்றை நடைமுறைச்சாத்தியமான கேந்திரங்களாக்கினோம். சிறு மற்றும் மத்திய அளவிலான பல வர்த்தகங்களை நாடு பூராவும் உருவாக்க நடவடிக்கை எடுத்தோம். நாடுபூராவுமுள்ள புத்துஜீவிகளின் ஒத்துழைப்பு எமக்கு தடையின்றி கிடைத்தது. மோசடிக்கு வேலியிட்டு நவீன முகாமைத்துவ முறைகளை அமைச்சிற்கு அறிமுகம் செய்து நாட்டிற்கு சுமையில்லாத நிறுவனங்களை அவற்றை மாற்றுவதற்காகவே இவையனைத்தும் மேற்கொள்ளப்பட்டன."

**பாட்டலி சம்பிக்க ரணவக்க**




- கல்வியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம், புத்தாக்க பொருளாதார மூலோபாயம் என்பவற்றை இலக்காகக் கொண்டு தேசிய ஆய்வு அபிவிருத்தி வலையமைப்பு உருவாக்கப்பட்டது.

- புத்தாக்குநர்களுக்கு கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களை தொடர்புபடுத்தி தொழில் நுட்ப சந்தையொன்றை உருவாக்கியமை.

- விதாதா திட்டத்தின் கீழ் 65,000 பேருக்கு சுயதொழில் மற்றும் தொழில்வாய்ப்பிற்கு அவகாசம் பெற்றுக் கொடுத்தமை

- நர்ட் நிறுவனத்தின் புதிய தொழில்நுட்பத்தை நாட்டிற்கு அறிமுகம் செய்தமை மற்றும் தர பணியகம் போன்றவற்றை பலப்படுத்தி லாபமீட்டும் நிலைமைக்கு மாற்றியமை.


National Physical Plan & Policy
WESTERN REGION MEGAPOLIS MASTER PLAN
From Island to Continent

"எமது திட்டத்தின் இலக்கு,அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமொன்றை உருவாக்கி சகலரும் சந்தோசமாக இருக்கும்,சகலருக்கும் தொழில் வாய்ப்பு கிடைக்கும் சிறந்த நாடொன்றை கட்டியெழுப்புவதாகும்.

பொதுமக்களுக்கு எந்த வகையிலும் சுமையேற்றாதவகையில் செயற்படுத்தப்படும் இந்த செயற்திட்டத்தில் நாம் நவீன தொழில்நுட்பம்,சம்பிரதாய அறிவு, என்பவற்றுடன் கைகோர்த்த பாரிய புரட்சியொன்றை செயற்படுத்துகிறோம். பிச்சைக்காரர்கள் இல்லாத குடிசைகள் அற்ற மானிட திருப்தியை உறுதி செய்யும் வசீகர நகரமொன்றை உருவாக்குவோம்.

இந்த உயரிய நோக்கத்தை நோக்கி செல்லும் இந்தப் பயணத்தில் நாம் கையாளும் சகல நிறுவனங்களும் லாபமீட்டி தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்தும் மூலங்களாக மாற்ற முடிந்திருப்பது பெருமைப்படக்கூடிய விடயமாகும்."

**பாட்டலி சம்பிக்க ரணவக்க**



- 10 வருடங்களின் பின்னர் இலங்கைக்காக புதிய தேசிய பௌதீக திட்டமொன்றை அறிமுகம் செய்ததினூடாக கொழும்பு திருகோணமலை என்பவற்றை நாட்டின் பிரதான பொருளாதார மேடையாக மாற்றும் யோசனை முன்வைத்தமை

- மேல் மாகாணத்திற்கு முறையான அபிவிருத்தியை பெற்றுக் கொடுப்பதற்காக மாநர திட்டமொன்றை அறிமுகம் செய்தமை மற்றும் சகல நிறுவனங்களின் பங்களிப்புடன் அதனை செயற்படுத்தியமை

- இலங்கையில் முதன் முறையாக சகல போக்குவரத்து மாதிரிகளையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவந்து, முறையான போக்குவரத்து திட்டமொன்றுடன் கூடிய பல்வகைமை போக்குவரத்து மத்திய நிலையமொன்றை அறிமுகம் செய்தல்

- சூழலியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்களின் கடும் எதிர்ப்புக்கு முகங்கொடுத்திருந்த போர்ட் சிட்டி திட்டத்தை சகலரது உடன்பாட்டுடன், நாட்டுக்கு சாதகமான வகையில் மீள் ஒப்பந்தம் செய்தமை. முறையாக செயற்படுத்தல் மற்றும் நிதி நகரமாக மீள கட்டியெழுப்புதல்

- பொதுப் போக்குவரத்தை ஊக்குவிப்பதற்காக பஸ்களுக்கு தனியான முன்னுரிமை ஓட்டப்பாதை அறிமுகம் செய்தமை. பஸ்களை நவீனமயப்படுத்தல் மற்றும் மீளமைப்பதினூடாக மிகவும் சிறந்த பொதுப் போக்குவரத்து பஸ் சேவையொன்றிற்காக திட்டம் தயாரித்தல்

- வெள்ளக் கட்டுப்பாட்டிற்காக கொழும்பு நீர் பம்பி நிலையமொன்றை உருவாக்குதல்

- கொழும்பு நகரிலுள்ள குறைந்த வசதியுடைய மக்களை மீள்குடியேற்றுவதற்காக 2020 ஆம் ஆண்டாகும் போது 20,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்,2025 ஆம் ஆண்டாகையில் கொழும்பு மற்றும் அண்டிய குடிசைவாசிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணுதல்

- கல்வி மற்றும் புத்தாக்கத்தை அடிப்டையாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கத்தில் ஹோமாகம தொழில்நுட்ப நகர பணிகளை ஆரம்பித்தல்

- பேரை வாவியை அண்டிய பிரதேசத்தை மத்திய வாணிப வலயமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் அருகில் வாழும் குடிசைவாசிகளுக்கு வீட்டுடன் புதிய வாழ்க்கை நிலையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல்

- பண்ட பரிமாற்றம் மற்றும் மீள் ஏற்றுமதியை முறைப்படுத்தல் மற்றும் லாபமீட்டும் பிரவர்ஜன நகர திட்டத்தை முன்வைத்து பணிகளை ஆரம்பித்தமை

- கற்ற மத்திய வர்க்கத்தினருக்காக உகந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 5000 வீடுகளுடன் கூடிய 'வியத்புர' வீடமைப்பு திட்டத்தை அறிமுகம் செய்து அதற்கான பணிகளை ஆரம்பித்தமை

- இலங்கைக்கு புதிய அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும் வகையில் கழிவு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அருவக்காட்டில் சுகநல கழிவு சேகரிப்பு நிலையத்தை யதார்த்தமாக்கியமை

- போக்குவரத்து நெரிசலை மட்டுப்படுத்தல் மற்றும் அரச ஊழியர்களின் அன்றாட செயற்பாடுகளை இலகுவாக்குதல் மற்றும் அரச சேவையை செயற்திறன் மிக்கதாக மாற்ற உகந்த அலுவலக நேரத்தை அறிமுகம் செய்தமை

- கொழும்பு நகரம் மற்றும் நெரிசலான பிரதேசங்களுக்கிடையில் மிகவும் செயற்திறனான போக்குவரத்து சேவையை அறிமுகம் செய்யும் நோக்குடன் இலகு ரயில் சேவை கட்டமைப்பொன்றை அறிமுகம் செய்தமை.

- கொழும்பு கழிவு பிரச்சினைக்கு தீர்வாக கழிவை சக்திமூலமாக பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை எடுத்தமை.

- பசுமை கட்டிட முறைமையை அறிமுகம்செய்வதினூடாக அரச மற்றும் அரை அரச கட்டிடங்களை பசுமை கட்டிடங்களாக மாற்றியமைக்க அரச முறைமையொன்றை தயாரித்தமை

- உத்தேச நிர்வாக நகரமாக பத்தரமுல்லையில் மூன்று அலுவலக கட்டிடத் தொகுதிகளை நிர்மாணித்து கொழும்பு மாவட்டத்திலுள்ள சகல அரச நிறுவனங்களையும் பத்தரமுல்லைக்கு கொண்டு செல்ல செயற்பட்டமை


- புறக்கோட்டை ,கண்டி,பத்தரமுல்ல,கடவத்தை,18 ஆவது மைல்கல், மற்றும் மொரட்டுவையை கோந்திரமாக கொண்டு பல்தேவை போக்குவரத்து மத்திய நிலையம் உருவாக்குதல்

- சொகுசு மூலோபாய நகர திட்டத்தின் கீழ் 73 நகரம் மற்றும் உபநகரங்களை அபிவிருத்தி செய்தல்

- மேல் மாகாணத்தை மாநகரமாக பௌதீக ரீதியில் மேம்படுத்தவதுடன் மேல்மாகாணத்தின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக 'மெத் சித் அருண' திட்டத்தை முன்னெடுத்தல்

- கொழும்பு மற்றும் நெரிசலான பிரதேசங்களில் இருக்கும் வீதியோர பிச்சைக்காரர்களை புனரமைப்பதற்கான திட்டமொன்றை ஆரம்பித்தமை மற்றும் வீதிகளில் நடமாடும் கட்டாக்காளி மாடுகளை பிடித்து மத்திய நிலையமொன்றில் தடுத்து வைக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டமை

நகர அபிவிருத்தி அதிகாரசபை



## காணி நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம்

2015 இல் எமது பொறுப்பின் கீழ் கொண்வரப்படுகையில் பாரிய நிதி நெருக்கடியை முகங்கொடுத்திருந்த இந்த நிறுவனம் 155 மில்லியன் ரூபா நஷ்டமீட்டியது. எமது நிர்வாகத்தின் கீழ் கடந்த 3 வருட காலத்தில் வருடத்திற்கு 365 மில்லியன் ரூபா சாதாரண லாபம் மக்களின் நலனுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டதை மகிழ்வுடன் அறிவிக்கிறேன்.

காணி நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்தின்
நிதிச் செயலாற்றுகை (ரூ.மில்)




## கொழும்பு துறைமுக நகர திட்டம்

நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்த காரணமாக இருந்த துறைமுக நகர திட்டம் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவருகையில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல சிக்கல்களை இந்தத் திட்டம் எதிர்கொண்டிருந்தது. கடந்த ஆட்சியில் பலவீனமான முடிவுகளினால் முறையற்ற விவதத்தில் செயற்படுத்தப்பட்டிருந்த இந்த திட்டத்தில் எமது நிர்வாகத்தின் கீழ் பல மாற்றங்களுக்கு உட்படுத்தினோம். இதன் பிரகாரம் இந்தத் திட்டத்தினூடாக இலங்கைக்கு உச்ச பிரதிபலன் கிடைக்கும் வகையில் 2016 இல் புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 2014 இல் மஹிந்த ராஜபக்ஷ கைச்சாத்திட்ட ஒப்பந்தத்திற்கும் எமது ஒப்பந்தத்திற்கும் இடையிலான வித்தியாசம் இதோ..

| 2014 இல் இருந்த அரசு கைச்சாத்திட்ட பழைய ஒப்பந்தம் | 2016 இல் நாம் கைச்சாத்திட்ட புதிய ஒப்பந்த நிபந்தனை |
|---|---|
| 20 ஹெக்டயார் காணி அறுதி உறுதியாக அளிப்பு. எஞ்சிய காணியை 99 வருட குத்தகை அடிப்படையில் வழங்குதல் | 99 குத்தகை அடிப்படையிலே சகல காணியும் வழங்கல் |
| குத்தகைக்காலம் முடிவடைந்த பின்னர் ஒரு பகுதி காணி இலங்கை அரசிற்கு. எஞ்சிய (20 ஹெக்டயார்) பகுதி சீன கம்பனிக்கு வழங்குதல் | குத்தகைக் கால இறுதியில் முழுக் காணியும் அரசு பெற்றுக்கொள்ளும் |
| அரசாங்கம் சார்பில் துறைமுக அமைச்சும் மறுபக்கம் திட்ட கம்பனியும் ஒப்பந்தம் கைச்சாத்து | மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி,நகர அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு துறைமுகநகர திட்ட கம்பனி இடையில் முத்தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்து |
| திட்ட பிரதேசத்தில் இருந்து முனையம் வரை உட்கட்டமைப்பு வசதிகளை அரசு மேற்கொள்ளும் | அரச மற்றும் தனியார் துறை இணைந்து கூட்டு வியாபாரமாக துறைமுக நகர உட்கட்டமைப்பு வழங்கல். அரச பொறுப்பை குறைக்க நடவடிக்கை |
| துறைமுக நகரத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்படும் | அரசு மற்றும் திட்டக் கம்பனி கூட்டாக இந்த கூட்டுகம்பனி உருவாக்கல் |
| மண்நிரப்பல் நிறைவடைந்து 3 வருடங்கள் வரை அரச காணியில் கல்வி, கலாசார அபிவிரவிருத்தி பணிகள் மட்டுமே முன்னெடுப்பு | சுகாதார சேவை, ஆஸ்பத்திரி, கண்காட்சி, விழா மண்டபம், கொழும்பு சர்வதேச நிதி மத்திய நிலையம் அபிவிருத்தி |

| | |
|---|---|
| திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்ட காலப்பகுதிக்கு நஷ்டஈடு கோரல் (175 மில். அமெரிக்க டொலர் | நஷ்டஈடு கோருவதை கம்பனி வாபஸ் பெறல். நிரப்பும் நிலப்பகுதி அதிகரிக்காது அரசுக்குரிய 62 ஹெக். காணியை குறைக்காது மேலதிக 2 ஹெக். திட்ட மறுசீரமைப்பினூடாக கம்பனிக்கு வழங்கல் |
| சகலசுற்றாடல்அனுமதிபத்திரங்களும் துறைமுக அதிகாரசபை தமது செலவில் பெற வேண்டும் | திட்ட கம்பனியின் செலவில், ஒத்துழைப்புடன் சுற்றாடல் அச்சுறுத்தல் மதிப்பீட்டை அமைச்சு 2015 இல் மேற்கொண்டு அதற்கான அனுமதியை பெறல் |
| கொழும்பு நகர வாகன நெரிசலை குறைக்க முடியாமை. வேறு அரச நிறுவன அனுமதியை உரிய காலத்தில் பெற முடியாமை | முன்பு அடையாளங்கண்ட வீதி அபிவிருத்தி திட்டம் செயற்படுத்தல், வாகன கையாளல் நடவடிக்கை ஊடாக போக்குவரத்துக்கு வசதி அளித்தல் |





# வீட்டுடன் வாழ்வு தரும்
# மாநகர விடமைப்பு திட்டம்

மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை என்பன அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் தலைமையின் கீழ் ஆரம்பித்து மக்களிடம் கையளிக்கப்பட்ட வீட்டுத் திட்ட சுருக்கம்

**வீட்டுடன் வாழ்வு - நகர புனர்வாழ்வு திட்டம்**

| | |
|---|---|
| 2016 - 2018 களில் நிறைவு செய்த வீடமைப்பு அலகுகள் | 3,429 |
| 2019 ஏப்ரல் முடிவுக்குள் பூர்த்தி செய்யும் வீடுகள் | 4,548 |
| தற்பொழுது நிர்மாணிக்கப்படும் வீட்டு அலகுகள் | 3,145 |
| பெறுகை நிறைவு செய்துள்ள விடுகள் | 600 |
| எஞ்சிய 2 மாத காலத்தில் பெறுகை ஆரம்பிக்க இருக்கும் வீடுகள் | 4,074 |
| **மொத்த வீடுகள்** | **15,796** |

வீட்டுத் திட்ட சுருக்கம்


| | |
|---|---|
| 2016 - 2020 ஆகையில் மக்களிடம் கையளித்த, கையளிக்கும் வீட்டு அலகுகள் | 20,000 |
| 2021 இல் நிறைவு செய்யப்பட இருக்கும் வீடுகள் | 5,000 |
| 2022 இல் நிறைவு செய்யப்பட இருக்கும் வீடுகள் | 5,000 |
| 2023 இல் நிறைவு செய்யப்பட இருக்கும் வீடுகள் | 5,000 |
| 2024 இல் நிறைவு செய்யப்பட இருக்கும் வீடுகள் | 5,000 |
| **2016 - 2024 வீட்டு அலகுகள்** | **40,000** |

# மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு பொறுப்பு

(2015 முதல் இன்று வரை)



# முதன்மையான தேசம்
# வளமான நகரம்



மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு

LRDC SERVICES (PVT) LTD

WATERS EDGE

- நகர அபிவிருத்தி அதிகார சபை
- காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்
- வோர்டர்ஸ் எஜ் தனியார் நிறுவனம்
- எஸ்எல்ஆர்டீசீ சர்விசஸ் தனியார் நிறுவனம்
- தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்
- மாநகர கருத்திட்ட பிரிவு

2015-09-08 முதல் இன்று வரை

தேசத்தின் மீது கடன்சுமையேற்றாது

# புதுப் பணியாற்றிய

பன்னிரு வருடங்கள்

